வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் – நாராயணசாமி

தேதி17.01.2025 நேரம் மாலை 6.10 மணி

---

## தலைப்புச் செய்திகள்

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இன்று புதுடெல்லியில், 2024ஆம் ஆண்டிற்கான **தேசிய விளையாட்டு விருதுகளை** வழங்கி சிறப்பித்தார்.

இந்தியாவின் **மோட்டார் வாகன உற்பத்தித் துறை**, முன் எப்போதும் இல்லாத அளவில், புரட்சிகரமான மாற்றங்களைக் கண்டு வருவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

தமிழக முன்னாள் முதலமைச்சர் **எம்ஜிஆர் பிறந்த நாளான இன்று** புதுச்சேரியில், முதலமைச்சர் திரு. ரங்கசாமி உள்ளிட்டோர், அரசு சார்பில், எம்ஜிஆர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

காரைக்காலில், இன்று நடைபெற்ற **சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின விழாவை**, அமைச்சர்கள் திரு. ஜெயக்குமார், திரு. பிஆர்என் திருமுருகன் ஆகியோர் தொடக்கி வைத்தனர்.

-----------------------------

## *விளையாட்டு விருது 1 (18)*

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இன்று புதுடெல்லி குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற விழாவில், 2024ஆம் ஆண்டிற்கான தேசிய விளையாட்டு விருதுகளை வழங்கி சிறப்பித்தார்.

உலக சதுரங்க சாம்பியன் குகேஷ், பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளில் இரட்டைப் பதக்கம் வென்ற மனு பாக்கர், ஆடவர் ஹாக்கி கேப்டன் ஹர்மன்ப்ரீத் சிங், பாரீஸ் பாரா ஒலிம்பிக் போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்ற ப்ரவீன் குமார் ஆகியோருக்கு, கவுரவம் வாய்ந்த மேஜர் தியான்சந்த் கேல் ரத்னா விருது வழங்கப்பட்டது. தடகள வீராங்கனைகள் அன்னு ராணி, ஜோதி யர்ராஜி, குத்துச் சண்டை வீராங்கனைகள் நீத்து, சவீத்தி, சதுரங்க வீராங்கனை வங்கிதா அகர்வால், ஹாக்கி வீரர்கள் அபிஷேக், சஞ்சய், பாரா வில் வித்தை வீரர் ராகேஷ் குமார், பாரா தடகள வீரர் சச்சின் கிலாரி உட்பட 32 பேர், அர்ஜுனா விருது பெற்றனர். முதுபெரும் தடகள வீரர் சுச்சா சிங், முதுபெரும் பாரா நீச்சல் வீரர் முரளிகாந்த் பேட்கர் ஆகியோருக்கு, வாழ்நாள் சாதனைக்கான அர்ஜுனா விருது வழங்கப்பட்டது. வில்வித்தை பயிற்சியாளர் தீபாலி தேஷ்பாண்டே, ஹாக்கி பயிற்சியாளர் சந்தீப் சங்வான், பேட்மிண்டன் பயிற்சியாளர் முரளிதரன், கால்பந்து பயிற்சியாளர் அர்மாண்டோ கோலேக்கோ உள்ளிட்டவர்கள், துரோனாச்சார்யா விருது பெற்றனர். பல்கலைக்

## விளையாட்டு விருது 2 (3)

கழகங்களுக்கு இடையிலான கேலோ இண்டியா விளையாட்டுப் போட்டிகளில், சிறந்த முறையில் வெற்றி பெற்ற பல்கலைக் கழகத்திற்கான மௌலானா அபுல்கலாம் ஆசாத் சுழற் கோப்பை, சண்டிகார் பல்கலைக் கழகத்திற்கு வழங்கப்பட்டது.

-----------------------------

## மோடி-போக்குவரத்து 1 (11)

**இந்தியாவின் மோட்டார் வாகன உற்பத்தித் துறை**, மக்கள் ஊக்கத்தினால் உந்தப்பெற்று, முன் எப்போதும் இல்லாத அளவில், புரட்சிகரமான மாற்றங்களைக் கண்டு வருவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். நவீன போக்குவரத்து வசதிகள் குறித்து, புதுடெல்லி **பாரத் மண்டபத்தில்** ஏற்பாடு செய்யப் பட்டுள்ள, **பாரத் மொபைலிட்டி உலகக் கண்காட்சியை**, இன்று அவர் தொடக்கி வைத்துப் பேசினார். நாட்டின் மோட்டார் வாகன உற்பத்தித் துறை, கடந்த ஆண்டு, 12 சதவிகிதம் வளர்ச்சி அடைந்து இருப்பதாகவும், **இந்தியாவில் தயாரிப்போம்** திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் வலுவான முன்முயற்சிகள், மோட்டார் வாகன உற்பத்தித் துறையின் வளர்ச்சிக்கு ஆதரவாக அமைந்து இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரதமரின் உரை குறித்து மேலும் சில தகவல்கள்.....

**(வாய்ஸ்)**

## மோடி-போக்குவரத்து 2 (17)

**(வாய்ஸ்)**

நாட்டில், போக்குவரத்து செயல்பாடுகளை எளிமையாக்குவதே இன்றைய அரசின் **முக்கிய முன்னுரிமை** என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறினார். கடந்த சில ஆண்டுகளில் மின்சார வாகனங்களின் பயன்பாடு, துரித வளர்ச்சி கண்டுள்ளதாகவும், மின்சார வாகனங்களின் விற்பனை, கடந்த 10 ஆண்டுகளில், 640 மடங்கு அதிகரித்து

இருப்பதாகவும்அவர் தெரிவித்தார். தேசிய அளவிலான அரசின் **புதிய போக்குவரத்துக் கொள்கையினால்**, சரக்குப் போக்குவரத்துத் துறையில், உலகிலேயே போட்டித் திறன் அதிகமுள்ள நாடாக இந்தியா மேம்படும் என்றும், அவர் கூறினார். பசுமைத் தொழில்நுட்பம், மின்சார வாகனம், ஹைட்ரஜன் எரிபொருள், மற்றும், உயிரி எரிபொருள் உற்பத்தி, மற்றும், பயன்பாட்டில், அரசு முக்கிய கவனம் செலுத்தி வருவதாக, அவர் தெரிவித்தார்.

மத்திய அரசின், **உற்பத்தித் திறனுடன் இணைந்த ஊக்கத் தொகைத்** திட்டத்தினால், மோட்டார் வாகன உற்பத்தித் துறையில், ஒன்றரை லட்சத்திற்கும் அதிகமான நேரடி வேலை வாய்ப்புகள் உருவாகி உள்ளதாக பிரதமர் தெரிவித்தார். கடந்த 4 ஆண்டுகளில் மட்டும், 36 பில்லியன் டாலர் நேரடி அன்னிய முதலீடுகளை, மோட்டார் வாகன உற்பத்தித் துறை ஈர்த்து இருப்பதாகவும், அவர் கூறினார்.

## மோடி-போக்குவரத்து 3 (10)

கடந்த ஆண்டு, **பாரத் மொபைலிட்டி உலகக் கண்காட்சியில்**, 800க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பங்கேற்றதாகவும், சுமார் ஒன்றரை லட்சம் பேர் கண்காட்சியை பார்வையிட்டதாகவும், பிரதமர் தெரிவித்தார். இம்முறை, இந்த 6 நாள் கண்காட்சியில், பல்வேறு **விரிவாக்க அம்சங்கள்** சேர்க்கப் பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். தொடர்ந்து, மோட்டார் வாகன உற்பத்தித் துறையின் முன்னேற்றங்கள் மற்றும் புதுமைப்

படைப்புகள் தொடர்பான பல்வேறு அரங்குகளை பிரதமர் பார்வையிட்டார்.

மத்திய தொழில் வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல், கனரக தொழில் துறை அமைச்சர் திரு. எச்டி குமாரசாமி உள்ளிட்டோர் கண்காட்சியின் தொடக்க விழாவில் கலந்து கொண்டனர்.

------------------------------

## அமித் ஷா-மத்திய பிரதேஷ் (6)

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, இன்று புதுடெல்லியில், மத்திய பிரதேஷ் முதலமைச்சர் திரு. மோகன் யாதவ் தலைமையிலான பிரதிநிதிக் குழுவினரை சந்தித்து, மாநிலத்தில் 3 புதிய குற்றவியல் சட்டங்களின் அமலாக்க நிலவரங்களை மறு ஆய்வு செய்தார். மத்திய உள்துறைச் செயலர் திரு. கோவிந்த மோகன், மற்றும், மூத்த அதிகாரிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

------------------------------

## புதுச்சேரி எம்ஜிஆர் (11)

தமிழக முன்னாள் முதலமைச்சர் **எம்.ஜி ராமச்சந்திரன் பிறந்த நாளான இன்று புதுச்சேரியில்**, புதிய பேருந்து நிலையம் எதிரே உள்ள எம்ஜிஆர் சிலைக்கு, முதலமைச்சர் திரு. ரங்கசாமி, அரசு சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். துணை சபாநாயகர் திரு. ராஜவேலு, அமைச்சர் திரு. சாய் சரவணன் குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. நேரு என்கிற

குப்புசாமி, திரு. ஏகேடி ஆறுமுகம் ஆகியோரும், எம்ஜிஆர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

உப்பளத்தில் உள்ள அஇஅதிமுக தலைமையகத்தில், அக்கட்சியின் மாநில செயலர் திரு. அன்பழகன் தலைமையில், எம்ஜிஆர் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது. தொடர்ந்து 500க்கும் மேற்பட்ட அஇஅதிமுகவினர் ஊர்வலமாக வந்து, பேருந்து நிலையம் எதிரே உள்ள எம்ஜிஆர் சிலைக்கும், மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

-----------------------------

*காரைக்கால் 1 (16)*

காரைக்காலில், சமூக நலத்துறை சார்பில் இன்று நடைபெற்ற **சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின விழாவை**, சமூக நலத்துறை அமைச்சர் திரு. ஜெயக்குமார், குடிமைப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. பிஆர்என் திருமுருகன் ஆகியோர், குத்து விளக்கேற்றி தொடக்கி வைத்தனர்.

அமைச்சர் திரு. ஜெயக்குமார் விழாவில் பேசுகையில், புதுச்சேரி மாநிலத்தில், ரேஷன் கடைகள் மூலம் தற்போது வழங்கப்படும் 10 கிலோ அரிசியை 20 கிலோவாக உயர்த்தி வழங்கவும், தீபாவளிக்கு கூடுதல் நிதி உதவி வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். முதியோர் ஒய்வூதியமாக மாதம் 4 ஆயிரத்து 500 ரூபாய் வழங்கும் ஒரே மாநிலம் புதுச்சேரிதான் என்றும் அவர் கூறினார்.

முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், வங்கிக் கணக்கில் 50 ஆயிரம் ரூபாய் வைப்பு நிதிப் பெறத் தேர்ந்தெடுக்கப்பட்ட 190 பயனாளிகளுக்கு, அடையாள அட்டைகள் இவ்விழாவின் போது வழங்கப்பட்டன. சிறப்பான முறையில் செயல்பட்ட அங்கன்வாடி ஊழியர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு போட்டிகளில்

*காரைக்கால் 2 (5)*

வெற்றி பெற்ற 300 பேருக்கும், பரிசுகள் வழங்கப்பட்டன. அலிம்கோ நிறுவனம் மூலம், 15 மாற்றுத்திறனாளிகளுக்கு, 3 சக்கர வாகனம் மற்றும் தள்ளு வண்டி வழங்கப்பட்டது.

விழாவில், மாவட்ட பேரிடர் ஆணைய துணை ஆட்சியர் திரு. வெங்கட கிருஷ்ணன், சமூக நலத்துறை துணை இயக்குநர் திரு. ராஜேந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

-----------------------------

*கும்ப மேளா (16)*

உத்தரபிரதேஷ் மாநிலம் **பிரயாக்ராஜில்** நடைபெற்று வரும் மகா கும்ப மேளாவில், போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு வசதிகளுக்கு அப்பாற்பட்டு, மேம்பட்ட மருத்துவ வசதிகளையும், **யாத்திரிகர்கள்**, மற்றும், பக்தர்களுக்கு வழங்க, சிறப்பு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. கும்பமேளா பகுதியில் உள்ள **அணிவகுப்பு மைதானத்தில்**, 100 படுக்கைகள் கொண்ட மத்திய மருத்துவமனை, **பிரத்யேகமாக** அமைக்கப் பட்டுள்ளது. இந்தியா மற்றும்

வெளிநாடுகளில் இருந்து வரும் பக்தர்களுக்கு, தொற்று நோய் சிகிச்சை அளிக்கவும், 2 தனி மருத்துவமனைகள் நிறுவப் பட்டுள்ளன. இதுஅல்லாது, கும்பமேளா பிராந்தியத்தின் பல்வேறு பகுதிகளில், தலா 20 படுக்கைகள் கொண்ட, 8 மருத்துவமனைகள் செயல்பட்டு வருவதாகவும், இந்த எல்லா மருத்துவமனைகளிலும், இலவசமாகவே சிகிச்சை அளிக்கப் படுவதாகவும், கும்பமேளா ஆணைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். பிரயாக்ராஜ் கும்பமேளாவில் பங்கேற்றுள்ள, சென்னையைச் சேர்ந்த பக்தர்கள் சிலர், தங்களின் அனுபவங்கள் குறித்து எமது செய்தியாளரிடம் பேசுகையில், ஏற்பாடுகள் குறித்து மகிழ்ச்சி வெளியிட்டனர். இவர்கள் மேலும் கூறுகையில்.....

(வாய்ஸ்)

-----------------------------

## முருகன் (9)

மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், ஜார்கண்ட் மாநிலத்தின் மேற்கு சிங்பூம் மாவட்டத்தில், வளர்ச்சி ஆர்வம் அதிகம் உள்ள மாவட்டங்களுக்கான மத்திய திட்டத்தின் அமலாக்க நிலவரங்களை மறு ஆய்வு செய்தார். ஜார்கண்டில் 3 நாள் பயணம் மேற்கொண்டுள்ள அவர் இன்று, ஜகன்நாத்பூர் ஐடிஐ மற்றும் கரஞ்சியா மீன்வளர்ப்பு மையத்தையும் நேரில் சென்று பார்வையிட்டார். பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நாடு எல்லாத் துறைகளிலும் வளர்ச்சி

அடைந்து வருவதாகவும், **வளர்ந்த இந்தியா** என்னும் இலக்கை நோக்கி நாடு வேகமாக முன்னேறி வருவதாகவும், அவர் கூறினார்.

------------------------------

## பெங்களூர் தூதரகம் (17)

பெங்களூரில், அமெரிக்காவின் புதிய தூதரகம் இன்று திறக்கப் பட்டுள்ளது. இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகளை விரிவாக்கவும், ஆழப்படுத்தவும், இத்தூதரகம் அவசியம் என்று, வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், திறப்பு விழாவில் பேசுகையில் கூறினார். பெங்களூரில், தொழில்நுட்பம் மற்றும் பாதுகாப்புத் துறை சார்ந்த நிறுவனங்கள் அதிகம் இருப்பதால், புதிய தூதரகத்தினால் பெங்களூர் நகரம் மிகுந்த பயன் பெறும் என்றும் அவர் தெரிவித்தார். பாதுகாப்பு, விண்வெளி, செயற்கை நுண்ணறிவு, மற்றும், பல்வேறு துறைகளில், இந்தியா-அமெரிக்கா இடையே, **ஒத்துழைப்பு வாய்ப்புகள்** அதிகம் இருப்பதையும் அவர் சுட்டிக் காட்டினார். புதிய தூதரகத்தில், விசா சேவைகள் விரைவில் தொடக்கப்படும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். உலக நாடுகள், இந்தியாவில் தூதரகம் தொடக்குவதை இந்தியா வரவேற்பதாக, வெளியுறவு அமைச்சர் கூறினார். அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில், இந்திய தூதரகம் விரைவில் தொடக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். இந்தியாவிற்கான அமெரிக்க தூதர் திரு. எரிக் கார்செட்டி, கர்நாடக துணை முதலமைச்சர்

திரு. டிகே சிவக்குமார் உள்ளிட்டோர், இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

------------------------------

க□ □ா (9)

கனடாவில், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சந்திரா ஆர்யா, இன்று அந்நாட்டின் பிரதமர் பதவிக்கு வேட்பு மனு தாக்கல் செய்துள்ளார். கர்நாடக மாநிலம் தும்கூர் பகுதியைச் சேர்ந்தவரான திரு. ஆர்யா, தார்வாடில், முதுகலை மேலாண்மைப் பட்டம் பயின்ற பின்னர், கனடாவிற்கு குடிபெயர்ந்தவர் ஆவார். இன்று வேட்பு மனு தாக்கல் செய்யும் முன்பாக, அவர் கனடா நாடாளுமன்றத்தில், கன்னட மொழியில் உரையாற்றினார். கனடா பிரதமர் திரு. ஜஸ்டின் ட்ரூடோ, அப் பதவியில் இருந்து விலகுவதாக ஏற்கனவே அறிவித்துள்ள போதிலும், புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் வரை, பதவியில் நீடிக்க உறுதி அளித்துள்ளார்.

------------------------------

மீண்டும் தலைப்புச் செய்திகள்

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இன்று புதுடெல்லியில், 2024ஆம் ஆண்டிற்கான **தேசிய விளையாட்டு விருதுகளை** வழங்கி சிறப்பித்தார்.

இந்தியாவின் **மோட்டார் வாகன உற்பத்தித் துறை**, முன் எப்போதும் இல்லாத அளவில், புரட்சிகரமான மாற்றங்களைக் கண்டு வருவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

தமிழக முன்னாள் முதலமைச்சர் **எம்ஜிஆர் பிறந்த நாளான இன்று** புதுச்சேரியில், முதலமைச்சர் திரு. ரங்கசாமி உள்ளிட்டோர், அரசு சார்பில், எம்ஜிஆர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

காரைக்காலில், இன்று நடைபெற்ற **சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின விழாவை**, அமைச்சர்கள் திரு. ஜெயக்குமார், திரு. பிஆர்என் திருமுருகன் ஆகியோர் தொடக்கி வைத்தனர்.